# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

நற்செய்தி துணுக்குகள்

## ஏப்ரல் 2021(மடல் - 21) செய்தி- 4

**“உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள். உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது. உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்” (சங்கீதம் 36:8,9).**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| ஆண்கள் பகுதி | 6 |
| பெண்கள் பகுதி | 9 |
| Children's Corner | 12 |
| வேத வினாக்கள் | 23 |
| கோதுமை மணி | 26 |
| துணுக்குகள் | 28 |
| ஆலய பக்கம் | 30 |

# ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்போடு கூட வாழ்த்தி உங்களை வரவேற்கிறேன். ஆண்டவரின் பெரிதான கிருபையினாலே இந்த 2021-ம் ஆண்டிலே மூன்று மாதங்களை முடித்து நான்காம் மாதத்திற்குள்ளாக அடியெடுத்து வைக்க ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். குடும்பமாக ஆண்டவருக்கு நன்றி செலுத்தி இந்த புதிய மாதத்திலும் ஆண்டவர் தருகின்ற ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.

**“உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள். உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது. உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்” (சங்கீதம் 36:8,9).**

பாலஸ்தீன தேசத்தில் நீர், நீரோடை என்பவைகள் அபூர்வமானவைகள். ஏனென்றால், பாலஸ்தீன நாடு ஒரு மலை நாடாகும். வருடம் முழுவதும் ஓடிக் கொண்டிருக்கும் யோர்தான் நதியானது நஞ்சை பூமிக்கு பயனுள்ளதாய் இருந்தாலும், அதன் ஆறு பள்ளத்தாக்கில் ஓடியதால், அதன் தண்ணீர் வயலுக்கு பயன்படவில்லை. மேலும் வேறு பல நீரோடைகள் இருந்தாலும் மழை காலத்தில் மாத்திரம் அவற்றில் நீர் இருக்கும். அவை கோடை காலத்தில் வறண்டு போய்விடும். எனவே நீரோடையை கடவுளின் அருளுக்கு ஒப்பிட்டு கூறுவது வழக்கம். காரணம், கடவுளின் அருளால் பற்றாக்குறை நீங்கும். சங்கீதம் 36:8,9-ன் படி, கடவுளை பேரின்ப நீரோடையாகவும் வாழ்வு தரும் ஊற்றாகவும் சொல்லப்படுகிறது. அதே போல சங்கீதம் 1:3-ன் படி, "அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்."

இந்த புதிய மாதத்தில் ஆண்டவரில் நிலைத்திருந்து கனிதரும் வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம். நிறைவளிக்கும் நீரோடையைப் பற்றி சிந்திப்போம்.

### 1. கடவுளின் சந்நிதியிலிருந்து புறப்படுகிறது

ஆண்டவரே இறை ஆசிக்கெல்லாம் காரணர். ஆமோஸ் 5:24-ஐ படிக்கும் பொழுது "நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக்கடவது" என்பது ஆமோஸ் தீர்க்கனின் மூலமாய் சொல்லப்பட்டது. நீதி, நேர்மை, அமைதி, ஆண்டவரின் சமூகத்திலே மாத்திரம் உண்டு. ஆகவே இந்த புதிய மாதத்தில் ஆண்டவரின் சமூகத்தை உறுதியாய் பற்றி பிடிப்போம்.

**2. திருப்தியளிக்கிறது**

"ஓ, தாகமாய் இருக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் தண்ணீர் அண்டைக்கு வாருங்கள்" (ஏசாயா 55:1). கடவுளே ஒவ்வொரு மனிதனின் தாகத்தையும் தீர்த்து திருப்தி கொடுக்கின்றார். கடவுளுக்கு கவனமாய் செவி கொடுப்பதன் வழியாக நிறைவையும், திருப்தியையும் பெறலாம். இம்மாதம் கூட இயேசுகிறிஸ்து நம் தாகத்தை தீர்த்து திருப்தி அடையச் செய்வாராக.

**3. வாழ்வு கொடுக்கின்றது**

சங்கீதம் 36:9-ன் படி வாழ்வுதரும் ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது. கடவுள் தம்மை தேடி வருவோர்க்கு வாழ்வு கொடுக்கின்றார். யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடத்தில் வரக்கடவர்கள். நான் உங்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் ஜீவ ஊற்றாக இருப்பேன். யோவான் 4:14-ன் படி அவரே நமக்கு நித்திய ஜீவ ஊற்றாக இருக்கிறார்.

இந்த புதிய மாதத்திலும் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டு வாழ்வு தரும் தண்ணீரைப் பெற்றுக்கொள்வோம். ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : jerirajkumar@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
***அருள்திரு. ஜெர்ரி ராஜ்குமார். C***

**மே மாத தலைப்பு**
**பரிசுத்த ஆவியானவர்**
**(Holy Spirit)**

## அழகு பெண்ணே உனக்காக......

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். இந்த தூது இதழ் மூலமாக இம்மாதமும் ஆண்டவரின் வார்த்தையை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்நொடி வரையிலும் ஆண்டவரின் அழகான கண்கள் நம்மீது நோக்கமாயிருந்து, நம்மை வழிநடத்திய கிருபைக்காக நாம் அவருக்கு குடும்பமாய் நன்றி செலுத்துவோம்.

கடந்த இரண்டு மாதங்களாக நம் ஆண்டவரின் உன்னத படைப்பான கண்களைக் குறித்தும், மேலும் நம் கண்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், பயன்படுத்த வேண்டும் என்பதையும் திருமறையின் அடிப்படையில் சிந்தித்தோம். இம்மாதம் நம் வாயின் அழகையும், அதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும் திருமறையின் ஆலோசனைப்படி சிந்திப்போம்.

சிருஷ்டி கர்த்தர் நம் சரீரத்தில் "வாயை" எவ்விதம் சிருஷ்டித்துள்ளார் தெரியுமா? வாய்ப்பகுதியின் வெளி விளிம்பில் உதடுகள் உள்ளன. மடிப்புகளாகிய உதடுகள் உட்புறம் மெல்லிய படலத்தால் மூடப்பட்டுள்ளன. உள்வாயின் இரு பக்கங்களிலும் கன்னத்தின் சுவர்கள் உள்ளன. இச்சுவரில் ஈரத்தன்மையுடய அடுக்கு ஸ்குவாமஸ் எபித்தீலியம் உள்ளது. உதடுகளும், கன்னமும் உணவைச் சமைப்பதிலும், பேசுவதிலும் உதவுகின்றன.

உள்வாயின் தரைப்பகுதியில் இணைந்துள்ளது நாக்கு. நாக்கின் மேற்புறத்தில் பல சுவை அரும்புகளுடன் கூடிய நுண் நரம்புகள் (PAPILLAE) உள்ளன. மேலும் வாயில் 32 பற்களும் உண்டு.

திருமறையின் அடிப்படையில் நியா.12:1-6-ன் படி, கீலேயாத்தியர் யோர்தானின் துறைகளைப் பிடித்துக்கொண்டு அக்கரைக்குத் தப்பிப் போக வரும் எப்பிராயிமரைப் பிடித்து "ஷிபோலேத்" எனச் சொல்லச் செய்வர். "ஷிபோலேத்" என்பதற்கு பதிலாக "சிபோலேத்" என்றால் எப்பிராயீமன் என்று கண்டுகொண்டு கொன்று போடுவார்களாம். ஆம், பிரியமானவர்களே, இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? நம் வாயின் வார்த்தைகள், உச்சரிப்பு எல்லாம் நம்மை பிறருக்கு நான் இன்னார் என்று அடையாளம் காட்டிவிடும்.

பேதுருவுக்கும் இந்த அனுபவம் உண்டு. மாற்கு 14:70-ல், "அவன் மறுபடியும் மறுதலித்தான். சற்று நேரத்துக்குப் பின்பு மறுபடியும் அருகே நிற்கிறவர்கள் பேதுருவைப் பார்த்து, மெய்யாகவே நீர் அவர்களில் ஒருவன். நீ கலிலேயன். உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது என்றார்கள்.

தன்னை யார் என்று அடையாளம் காட்ட விரும்பாமல் பேதுரு தன்னை மறைக்க விரும்பி பொய் சொல்லி சத்தியம் பண்ணும் நேரத்தில், அருகிலிருந்தோர், "உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது" என்று சொல்லி, அவன் கலிலேயன் தான் என்று உறுதியாய்ச் சொல்கின்றனர்.

ஆம் பிரியமானவர்களே, இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று வேதம் சொல்கிறது. வாய்க்கு அழகே வார்த்தைகள் தான் எனில் மிகையாகாது. ஆம் அந்த வார்த்தைகள் நம்மை அடையாளமும் காட்டிவிடும். நம்மை உலகிற்கு அடையாளம் காட்டும் வார்த்தைகளை நாம் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை திருமறையின் அடிப்படையில் வருகின்ற மாதங்களில் சிந்திக்கலாம். தொடர்ந்து இம்மாதம் முழுவதும் ஆண்டவர் தாமே நம்மை வழிநடத்தி காப்பாராக. ஆமென்.

- **தொடரும்**

இப்படிக்கு
உங்களுக்காக எப்பொழுதும் ஜெபிக்கும்
**திருமதி. *ஏஞ்சலின் ஜெர்ரி ராஜ்குமார்***
**ஆயரம்மா**

## கடவுளின் வார்த்தையை மதித்து நடத்தல்

ஒரு சிறுவன் பழைய பொருட்கள், உடைந்து போன மர சாமான்கள், தேவைற்ற பொருள்கள் ஆகியவற்றை சேமித்து வைத்திருந்த அறையில் இருந்து தன்னுடைய பழைய விளையாட்டு பொம்மையை தேடி எடுக்கச் சென்றான். அப்பொழுது தூசு படிந்த ஒரு பெரிய புத்தகத்தைக் கண்டு பிடித்தான். அதை தன் தாயிடம் கொண்டுவந்து அதைப்பற்றி கேட்டான். தடுமாற்றம் அடைந்த அந்த தாய் "இது வேதாகமம், கடவுளுடைய புத்தகம்" என்று பதட்டமாக பதிலளித்தாள். யோசனையில் ஆழ்ந்த அந்த சிறுவன் இது கடவுளின் புத்தகமானால் இதை ஏன் நாம் கடவுளிடமே திருப்பி கொடுத்து விட கூடாது ? இங்கே யாரும் இதை பயன்படுத்தவதில்லையே என்று கேட்டானாம். இந்த சம்பவத்தைப் படிக்கும் போது என்னைப்போல நீங்களும், நான் அப்படி அல்ல, வேதத்தை என் அருகில் வைத்திருக்கிறேன், தினம் தோறும் வாசிக்கிறேன் என்று ஒருவேளை பெருமையாக நினைக்கக்கூடும். ஆனால் இறைவன் வேதத்தை நம் கரத்தில் வைத்திருப்பதில் அல்ல , இதயத்தில் காத்து நடப்பதையே விரும்புகிறார் என்று வேதம் நமக்கு தெளிவாக சொல்லுகிறது. உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால், என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது (சங் 119:136), என்று சங்கீதக்காரனின் ஏக்கத்தை நாம் வாசிக்கிறோம்.

### <u>வார்த்தையின் வல்லமை</u>

உலகமும் அதன் சிருஷ்டிகளும் இறைவனுடைய வார்த்தையால் உருவாக்கப் பட்டதாக நாம் படைப்பின் வரலாற்றில் இருந்து அறிந்துகொள்கிறோம். "வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று" என்று ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இது இறை வார்த்தையின் வல்லமையை நமக்கு பறை சாற்றுகிறது.

எபிரேயர் 4 :12, கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது,. ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக் கூடிய எந்த வாளினும் கூர்மையானது, என்று விவரிக்கிறது. தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே" (சங் 62:11), என்று தேவனுடைய வல்லமையை சங்கீதக்காரன் சொல்கிறார். தேவனுடைய வல்லமையை நாம் எங்கு காணமுடியும்? நிச்சயமாக தேவன் அருளிய வேதத்தில்தான் காணமுடியும். "என் வார்த்தை அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:29) என்று எரேமியா தீர்க்கதரியின் புத்தகத்தில் தேவ வார்த்தையின் வல்லமையைக் குறித்து ஆண்டவர் வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தையும் வாக்குத்தத்தமும் வல்லமையாய் செயல்படுவதை ஆபிரகாமின் வரலாற்றில் இருந்தே நாம் வாசித்து அறிந்து இருக்கிறோம் .

**வார்த்தையே வாழ்வு தருவது**

மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் (மத்தேயு 4: 4) என்று ஆண்டவர் சொன்னார் .நாம் மூன்று வேளை உணவு உண்பதற்கு மறப்பதில்லை. நம்முடைய சரீர வளர்ச்சிக்கு எப்படி உணவு தேவையோ அதேபோல ஆத்மீக வளர்ச்சிக்கு தேவனுடைய வார்த்தை மிகவும் அவசியம். பிசாசானவன் ஆண்டவர் இயேசுவை சோதனைக்கு உட்படுத்தியபோது வார்தையைக் கொண்டே அவர் சத்துருவை மேற்கொண்டதை நாம் அறிவோம். தேவனுடைய வார்த்தைகள் நித்திய ஜீவனுக்கு ஏதுவானவை, அவைகளினால் மட்டுமே நமக்கு வாழ்வு உண்டு. ஆகவே தான் சீமோன் பேதுரு, ஆண்டவரே, யாரிடத்தில் வோம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே (யோவான் 6:68) என்று கேட்பதை நாம் பார்க்கிறோம்.

**வார்த்தையை மதிப்பது - தேவனை நேசிப்பது**

தேவன் மனிதனுக்கு கொடுத்த முதன்மையான கற்பனை அவரை அன்பு செய்வது. “இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகளை உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசு. (உபா 6: 4-7) என்று உபாகமத்திலே தம் பிள்ளைகளுக்கு தேவன் கட்டளை கொடுப்பதை நாம் வாசிக்கிறோம்.

தேவனை நேசிப்பதும் வேதத்தை வாசிப்பதும் ஆழமாக ஒன்றோடொன்று இணைந்தது. தேவனை உணமையாக நேசித்தால் அவருடைய வார்த்தையின் மூலம் அவரை அறிந்து கொள்ள விருப்பம் கொள்வோம். வேதத்தை வாசிக்க நேரம் எடுக்காததும், அதன்படி வாழாமல் இருப்பதும் தேவனை நேசிப்பதில் குறையுள்ளவர்களாய் இருப்பதை காண்பிக்கிறது. இயேசுவும் இதைப்பற்றி சொல்லுகிறார். ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். (யோவான் 14:23)

மரியாள் தேவன்மேல் உள்ள அன்பை சரியான முன்னுரிமை (முக்கியத்துவம்) கொடுத்து வெளிப்படுத்தினாள். அவள் இயேசுவினுடைய வார்த்தையை கேட்கமுக்கியத்துவம் கொடுத்தாள். இயேசுவும் அதை பாராட்டினார்.

படைக்கிற, பாதுகாக்கிற, பராமரிக்கிற, பாவங்களை மன்னிக்கிற, புது வாழ்வளிக்கிற, திட நம்பிக்கை அளிக்கிற, சுகப்படுத்துகிற, மறுவாழ்வு அளிக்கிற இப்படி எத்தனையோ காரியங்களை செய்கிற வல்லமை உள்ளது இறைவார்த்தை. இந்த சவாலான காலங்களில் நமக்கு தேவையான தேவனுடைய வல்லமையைப் பெறுவதற்கு நம் இருதயத்தையும் நம்முடைய

ஆத்துமாவையும் தேவனுடைய வார்த்தையினாலும் இயேசு கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் அஸ்திபாரத்தினாலும் நிரப்புவது மிக முக்கியம். தேவ வார்த்தையை அனுதினமும் கருத்தோடு வாசிக்கிறவர்களாய் மட்டுமல்ல, அதை மதித்து, தியானித்து, கடைபிடித்து வாழ்வோம். தேவன் தாமே தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இருபுறமும் கருக்குள்ள தேவ வார்த்தை...
இதயத்தை உருவக் குத்தும் தேவ வார்த்தை...!
வல்லமையும் ஜீவனுமாம் தேவ வார்த்தை
வழிகாட்டும் தீபமுமாம் தேவ வார்த்தை...! (எபி 4:12)

நீதியை நிலை நாட்டும் தேவ வார்த்தை...
பாதையில் வழி காட்டும் தேவ வார்த்தை
பேதைக்கு ஒளி ஊட்டும் தேவ வார்த்தை ...
பாவத்தின் வழி மாற்றும் தேவ வார்த்தை....! (சங் 119: 105,130)

புல்லின்மேல் பனித்துளியாய் வசனம் இறங்கும்
இளம்பயிரில் மழை போல இதமாய் இருக்கும்
புடமிட்ட வார்த்தை நம்மை நடத்திச் செல்வது
நம்பினோரை உத்தமமாய் நடக்கச் செய்வது ..!! (உபா 32:2, II-சாமு 22:31)

பாவத்தின் சம்பளமாய் மரணம் இருக்கும்
வேதத்தின் வழி நித்திய ஜீவன் கிடைக்கும் ..!!
அழிவில்லா வித்தாகும் வசனத்தில் நிலைப்போம் ..
முடிவில்லா வாழ்விற்கு முன்னே நடப்போம் ..!!! (I-பேதுரு 1:22, ரோம 6:22)

ஆராய்ந்து பார்க்க நித்திய ஜீவன் உண்டு ..!
ஆண்டவரைக் குறித்து அங்கே சாட்சியும் உண்டு ..!!
கேளாமல் செவியை விலக்க கேடு வந்திடும் ...!!!
நேசித்து நடப்போம் நித்திய ஜீவன் தந்திடும் ..!!! (யோவா 5:39, சங் 119:165)

கிறிஸ்துவில் அன்புடன்
**ஜெய சந்திர ராஜா**

## கருக்குள்ள பட்டயம்




பட்டயம் என்றாலே ஒருவிதமான பயம் நம் மனதில் வரும். நாம் காணப்போகும் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் நம்மை அழிக்கும் பட்டயம் அல்ல. நம்மை காக்கும் பட்டயம். தேவ வசனமே அந்த பட்டயம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபி. 4:12). அப்படியானால் அதை மதித்து, கீழ்ப்படிந்து நடப்பது நமது கடமையாகும்.

- **தேவ ஆவியானவரால் அளிக்கப்பட்டது தேவனுடைய வார்த்தை**

தேவனுடைய வார்த்தையை நமக்கு அளித்தவர் தேவ ஆவியானவர். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2தீமோ.3:16a). மதிப்புமிக்க நபரிடமிருந்து நமக்கு ஒரு வெகுமதி கிடைத்தால் நாம் அதை மிகவும் அக்கறையாக பேணிக் காப்போம் அல்லவா? அப்படியானால் அண்டசராசரத்தையும் தன் ஆளுகையில் வைத்திருக்கும் ஆண்டவரின் மூலம் நமக்கு கிடைத்த தேவ வார்த்தையை நாம் எவ்வளவு அதிகமாக மதித்து நடக்க வேண்டும்? தேவன் உண்மையுள்ளவராய் இருப்பதால் அவர் நமக்கு தந்துள்ள வசனம் முற்றும் சத்தியம். உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம். பிரபுக்கள் காரணமில்லாமல் என்னைத் துன்பப்படுத்தினார்கள்; ஆனாலும் என் இருதயம் உமது வசனத்திற்கே பயப்படுகிறது (சங். 119:160,161). தேவ வசனத்தை தன் வாழ்க்கையில் அனுபவித்துள்ள தாவீதின் வசனம் அதை நமக்கு அழகாக எடுத்துக்காட்டுகிறது. ஆதி.1:1 முதல் வெளி.22:21 வரை உள்ள தேவனின் வார்த்தையில் ஒரு தவறும் கிடையாது. அது மாத்திரமல்ல. வானமும் பூமியும் ஒழிந்தாலும் என் வார்த்தைகள் ஒரு போதும் ஒழிவதில்லை தேவன் கூறுகிறார். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை (லூக்கா 21:33). உண்மையுள்ள, என்றும் அழியாத பட்டயம் தேவனுடைய பட்டயம்.

- **முக்கியத்துவம் வாய்ந்தது தேவ வார்த்தை**

உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்(சங்.138:2b). தேவன் தமது வார்த்தையை தன் சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் மகிமைப்படுத்தியிருக்கிறார் என்று தாவீது சொல்கிறார். நாம் வணங்கும் தேவன் அன்பானவர், அதிசயமானவர்,

உண்மையுள்ளவர், நல்லவர், நீதியுள்ளவர். ஆயிரம் நாவாலும் விவரிக்கமுடியாத நம் ஆண்டவர் தம் பிரஸ்தாபத்தை பார்க்கிலும் தமது வார்த்தையை மகிமைப் படுத்தியிருக்கிறார் என்பது, நாம் அவர் வார்த்தைக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. மகிமை நிறைந்த, மகிமையை நம்மிடையே கொண்டு வருகிற பட்டயம் தேவ வசனம்.

- **தேவ வார்த்தையின் நோக்கம்**

தேவ வசனத்தை ஒரு நோக்கத்தோடு தேவன் அருளியிருக்கிறார். முதலாவதாக தேவ வசனம் நமக்கு பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கிறது. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் (யாக். 1:21). இரண்டாவதாக தேவ வசனம் நம்மை பரிசுத்தமாக்கும். உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்(யோவான் 17:17). கடைசியாக நாம் சரியான வாழ்க்கை வாழ பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2தீமோ.3:17).

இத்தகைய ஆசீர்வாதங்களைக் கொடுத்து நம்மை திருப்திபடுத்தும் தேவ வார்த்தையாகிய பட்டயத்தை மதித்து, அதின்படி நடப்பது நம் கடமையல்லவா?
எனவே நாம் தேவ வசனத்தை

- நேசிப்போம் - அப்போது வேத வசனத்துக்கு முதலிடம் கொடுத்து நம் காரியங்களை செய்வோம்.
- அனுதினமும் படிப்போம் - அதை வாசித்து, தியானித்து மனதில் பதிப்போம்.
- வாழ்ந்து காட்டுவோம் - தேவ வசனத்துக்கு கீழ்ப்படிந்து வாழ்வோம்.

இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய தேவ வசனம் நம்மை நித்தியத்திற்கு நேராக நடத்தி செல்லட்டும்.

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

**நோவாவின் மனைவி** (ஆதி.6:10-19; 8:15,16; 7:1-7)

நோவாவின் பிள்ளைகளைக் குறித்தும், பேரப்பிள்ளைகளைக் குறித்தும் வம்ச வரலாறுகளைக் குறித்தும் வேதத்தில் வாசிக்கிறோம். ஆனால் நோவாவின் மனைவியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. நோவா நீதிமான், உத்தமன், தேவனோடே சஞ்சரித்தவன். பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த பரிசுத்தவான். இப்படிப்பட்ட பக்தியுள்ள கணவனைப் பெறும் பாக்கியத்தைப் பெற்ற பாக்கியவதி இவள். இவர்களுக்கு மூன்று குமாரர்கள். நோவாவுக்கு ஒத்துழைத்த மனைவி என்று நோவாவின் மனைவியை சொல்லலாம். ஏனென்றால் தேவன் நோவாவுக்கு கொடுத்த மிகப் பெரிய கடினமான வேலையை கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து பேழையை ஆயத்தம் பண்ணும்போது நோவாவின் மனைவி எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் ஒத்துழைத்து, மிகுந்த உதவியாக இருந்திருப்பாள். மூன்று பிள்ளைகளையும் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக வளர்த்ததில் அவளுக்கு பங்கு உண்டு என கருதலாம். நற்காரியங்களில் கணவனுக்கு ஒத்துழைப்பது கணவனின் கடமை. பேழை உண்டு பண்ணுகிற காரியத்தில் மறைந்திருந்து நோவாவின் மனைவி செய்த காரியங்கள் போற்றத்தக்கது. ஆதி. 6:19-ல் கர்த்தர் நோவாவுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு பேழைக்குள் சேர்த்துக்கொள் என்று கட்டளையிடுகிறார். மிருகங்களையும், பறவைகளையும் சேர்ப்பது எளிதானதல்ல. இந்த கடினமான வேலையையும் நோவா நிறைவேற்றி கர்த்தரின் கட்டளைப்படி எல்லா இனங்களையும் பேழைக்குள் கொண்டு வந்து சேர்த்தான். நோவாவுக்கு கொடுத்த இந்த வேலையிலும், அவன் மனைவி ஒத்துழைக்கும் மனைவியாக இருந்திருப்பாள். நோவா களைத்துப்போய் தாமதமாக வீட்டிற்கு வரும்போது பொறுமையாக தோள் கொடுத்திருப்பாள். நோவாவின் குடும்பத்தினர் கிட்டத்தட்ட 382 நாட்கள் பேழைக்குள் இருந்தனர். மிருகங்கள், பறவைகளின் சத்தம், கழிவுப்பொருட்களின் துர்நாற்றம் எல்லாவற்றையும் நோவா குடும்பத்தினர் சகித்தனர். கர்த்தர் கொடுத்த கட்டளையை நிறைவேற்றுவதற்கு நோவா குடும்பத்தினர் குடும்பமாக ஒத்துழைத்தனர். அதனால் எல்லாரும் ஜலப்பிரளயத்தால் மாண்டு போனபோது நோவா குடும்பத்தார் மட்டும் காப்பாற்றப்பட்டனர். ஆதி.7:5-ல் நோவா கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் செய்தார் என்று பார்க்கிறோம். நோவாவின் மனைவி தன் மருமக்களொடு இணைந்து பேழைக்குள் வாழும் அனைவருக்கும் உணவு தயாரிப்பது போன்ற காரியங்களில் ஒத்துழைத்ததால், கடவுளின் கட்டளையை நோவாவால் நிறைவேற்ற முடிந்தது. நோவாவின் மனைவியின் பெயர் தெரியவில்லை. ஆனால் அவளுடைய மறைந்து செயல்படும் குணம், கணவன் மற்றும் பிள்ளைகளுடன் உள்ள ஒத்துழைப்பு, குடும்ப காரியங்களை கவனிப்பது, கணவனுக்கு கர்த்தர் கொடுத்த கட்டளையை நிறைவேற்ற உறுதுணையாக இருந்தது. தனி நபராக அல்ல, குடும்பத்தோடு கிறிஸ்துவாகிய பேழைக்குள் பிரவேசிக்க முயற்சிப்பது பாராட்டத்தக்கது.

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,

The exams are finally over. It's time to look forward to another new Academic Year. A new school year probably means – new uniforms; new school bags; new books; and new stationary. Even our learning devices, like laptops, need updating, reformatting, rebooting and sometimes replacing.

But can you think of something that does not change, or does not need replacing – Yes, it's your Bible.

The theme for the month of April is – "**Respect for God's Word**"

Why should we respect God's Word? Because the Word of God is "timeless" and yet "timely"; **inspired by the Holy Spirit.**

**TIMELESS**

Isaiah says, "The grass withers and the flowers fall, but the Word of our God stands forever" (40:8)

The Word of God is also Faithful (Ps. 119:86); True (John 17:17); and Omnipotent (Isa. 55:11); By the Word of the Lord, the heavens and earth were created (Gen. 1). Salvation comes by the power of the Word (Rom. 1:16, I Pet. 1:23), and Judgment is by the Word also (John 12:48)

**TIMELY**

The living Word of God is dynamic and speaks to the needs of our times. The Bible says in Romans 15:4 - "For everything that was written in the past was written to teach us...".

Since it is the very voice of God, it addresses all our deepest needs. It gets into our very insides and discerns the thoughts and intents of our hearts. Nothing is hidden from its sight (Heb. 4:12)




And fortunately for His children, His Holy Spirit brings to life the pages of His Word in prayer and meditation.

So children, throughout this school year, always remember to daily read the Bible, and give God's Word, all Glory, Praise and Respect...

## THE BOOK OF ECCLESIASTES

**Author**: Traditionally attributed to King Solomon

**When It Happened**: About 980 BC **Chapters**: 12







**Summary**: In the book of Ecclesiastes, Solomon, the king of great wisdom and wealth, revealed that the things of the world are empty, hollow, and without meaning. Seeking happiness from "earthly things" is a waste of time

Solomon's conclusion was that it is only through faith in God that one can achieve wisdom, meaning, and true happiness in this life. Nothing else can satisfy.

**About God**: God promises Joy, to all who obey His commandments and fear Him, more than earthly, temporary pleasures.

### THE BIBLE… IT'S SO MUCH MORE…




Preparing for a long trip, a traveler said to his friend: "I am just about packed.

I only have to put in a guidebook, a lamp, a mirror, a microscope, a telescope, a volume of fine poetry, a few biographies, a package of old letters, a book of songs, a sword, a hammer and a set of books I have been studying."

"But," the friend replied, "you can't get all that into your bag."

"Oh, yes I can," replied the traveler, "it doesn't take much room."

Then he placed his Bible in the corner of the suitcase and closed the lid.

**TINY TOTS SECTION (Beginners and Primary)**

## God's Word

What was written in Romans 15:4 to teach us about God and give us hope?

Connect the dots • 1–15. Color the picture.




The B-I-B-L-E, yes that's the book for you!

The bible is full of stories for little children. One such story is given below.

Fill in the gaps and then read a parable that Jesus told one day.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
|  Farmer |  Seeds |  Birds |  Rocks |  Weeds |  Word of God |  Good Ground |

A  ______________ sows  ___________ in a field. Some  __________ fall on the road, and the  _____________ quickly eat it. Some  ___________fall where there are  _____________ . The plants grow, but soon the sun dries them up. The plants die because there is no soil. Some  ______________ grow among  ______________. They stop the plants from growing, and the plants die.

But other  _____________falls on  _______________________. The plants grow well.

The  _______________ has a good harvest from these plants.

Jesus said that the  ___________ were the  _________________________________

Some children do not listen to  ____________________________, or listen and forget.

**But some children Listen, Obey, and grow up as good Christian children in the Lord.**

**Which kind of child are you going to be today?**

**Color in the below picture and make it as beautiful as you can.**

**Then write your name below the "I"**



**OLDER CHILDREN SECTION - CHOOSE THE CORRECT OPTION – BOOK OF ECCLESIASTES**

1. Who is traditionally attributed with writing the book of Ecclesiastes?
a. David b. Solomon
c. Samuel d. Lemeul

2. in Ecclesiastes 1:4, "Generations come and generations go, but the _____remains forever."
a. land b. earth
c. world d. universe

3. Why does history repeat itself? (1:11)
a. God has ordained it to be so b. Lack of history teachers
c. People want history to repeat d. There is no remembrance of former generations

4. What does 2:14 say a fool walks in?
a. beauty b. darkness
c. manure d. snow

5. Complete this verse: "He has made everything beautiful in his ____"
a. way b. time
c. world d. creation

6. Why are two better than one? (4:10)
a. If they fall, the one will lift up his fellow b. If they plan, two heads are better than one
c. If they travel, this reduces loneliness d. If they travel, this provides protection

7. What should you do when you go to the house of God? (5:1)
a. Be more ready to hear b. Be ready to worship
c. Bring a sacrifice of praise d. Enter His courts with thanksgiving

8. What is better than fine perfume? (7:1)
a. A good name b. Fame
c. Knowledge d. Wealth

9. What should a person do in their youth? (12:1)
a. Be baptized in water b. Remember his Creator
c. Receive the Holy Ghost d. Repent

10. What did Solomon give as a conclusion? (12:13)
a. Fear God, and keep his commandments b. Love God with all your heart, soul and mind
c. Love your neighbor as yourself d. None of the above

## TEEN THOUGHT

**Q. What does it mean that the Word became flesh (John 1:14)?**



The term 'Word' is used in different ways in the Bible.

In the New Testament, there **are two Greek words translated "word": rhema and logos.**

**Rhema** usually means "**a spoken word**."

**Logos**, however, has a broader meaning. It usually implies a **total message**, and is used mostly in reference to God's message to mankind.

"The Word" (Logos) in John 1 is referring to Jesus. Jesus is the total Message—everything that God wants to communicate to man.



Jesus told a parable in Luke 20:9–16 to explain why the Word had to become flesh (Look up the reference).

In this parable, Jesus was reminding the Jewish leaders that they had rejected the prophets and were now rejecting the Son. Therefore, the Logos, the Word of God, the message of Salvation, was going to be offered to everyone, not just the Jews.

When we hear the Word of God today, let us not reject it like the Jews during the days of Jesus.

Let us strive to be **Doers of the Word and not just Hearers (James 1:22)**

## COMPLETE THE PICTURE

On the following page, a timeline has been illustrated from Genesis till the Birth of Jesus. But some key events are missing. Thanks to the Word of God, we have a record of the Mighty Works of God!
Fill in the gaps using the following words – Jesus' Birth; Esther; Creation; Ruth; Daniel; Esau and Jacob; Noah's Ark; Crossing the Red sea; Abraham; The promised land; Elijah; Angel visits Mary; Jonah; King David; Moses

# IN THE BEGINNING WAS THE WORD




## AND THE WORD BECAME FLESH AND DWELT AMONG US

## WILLIAM TYNDALE: GOD'S OUTLAW – A MAN ON A MISSION



In the 1500s, in England, ordinary people did not own Bibles.

In church, the priest read the Bible in Latin, a language only the most educated people could understand.

William had a gift for languages. He could read and write in SEVEN languages!

As William Tyndale grew older, he felt that God was calling him to translate the Bible into English so that all people could read it for themselves.

But translating the Bible was against the law in those days. The government ordered book burnings of all the English translations they could find.

King Henry of England found out about the work Tyndale was doing. Tyndale was sentenced to death by burning at the stake.

His last words were, "God, please open the King of England's eyes."

God answered William's prayer in a powerful way.

Within one year of William Tyndale's death, the King of England gave approval for an English Bible to be published.

Tyndale's Bible was used as a guide for the new translation. This new translation is the father of the King James Bible that is still read today.

**Many of God's faithful people have suffered and died, so that you and I may have God's Word in our hands today.**



cxiv.

The Goſpell off
Sancte Jhon.
The fyrſt Chapter.

IN the begynnynge was that worde/ãd that worde was with god: and god was thatt worde. The ſame was in the begynnynge wyth god. All thyngſ were made by it/ and with out it/ was made noo thige/ that made was. In it was lyfe/ And lyfe was the light of mē/ And the light ſhyneth i darcknes/ ãd darcknes cōprehēded it not.
There was a mā ſent from god/ whoſe name was Jhon. The ſame cā as a witnes/ to beare witnes of the light/ that all men through hī myght beleve. He was nott that light: but to beare witnes of the light. That was a true light/ whīch lighteneth all men that come ito the worlde. He was in the worlde/ ãd the worlde by hī was made: and the worlde knewe hym not.
He cā ito his awne/ ãd his receaved hī not. vnto as meny as receaved hī/ gave he power to be the ſōnes of god: i that they beleved ō his name: which were borne not of bloude nor of the will of the fleſſhe/ nor yet of the will of men: but of god.
And that worde was made fleſſhe/ and dwelt amonge vs/ and we ſawe the glory off yt/ as the glory off the only begotten ſonne off the father/

(The beginning of the Gospel of John from a copy of the 1526 edition of William Tyndale's New Testament at the British Library)

[William Tyndale (1494 – 1536) English biblical translator, humanist, and Protestant martyr]

